# QB365 Question Bank Software Study Material

## பொருளியல் - தமிழகத்தில் வேளாண்மை முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு
## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 62

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) உணவுப்பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும், உணவல்லாத பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும் எழுதுக.

பதில் : **உணவுப் பயிர்கள்:**
நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, கேழ்வரகு
**உணவல்லாத பயிர்கள்:**
தென்னை. பருத்தி, காப்பி, தேயிலை. கரும்பு

2) பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு மாறுவதற்கான காரணிகள் யாவை?

பதில் : 1. மழைப் பொழிவு
2. நீர் இருப்பு
3. கால நிலை
4. சந்தை விலை

3) நிலத்தடி நீரின் அளவையும் தன்மையையும் யாரால் கண்காணிக்கப்படுகிறது?

பதில் : 1. நிலத்தடி நீரின் அளவையும் தன்மையையும் மத்திய நிலத்தடி நீர் வாரியம் தொடர்ந்து கண்காணிக்கிறது.
2. இத்தொடர் கண்காணிப்பின் அடிப்படையில் நீர் பயன்பாடு அளவைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்களை இவ்வாரியம் வகைப்படுத்தியுள்ளது.

4) நெல் உற்பத்தித் திறனை 1965 முதல் 2015 வரை பட்டியலிடுக.

பதில் :

| ஆண்டு | நெல் உற்பத்தித் திறன் |
|---|---|
| 1965-66 | 1409 கிலோ |
| 1975-76 | 2029 கிலோ |
| 1985-86 | 2372 கிலோ |
| 2014-15 | 4429 கிலோ |

5) பயிர்களின் விளைச்சல் எதனைச் சார்ந்து இருக்கிறது?

பதில் : பயிர்களின் விளைச்சல் பயிரிடப்படும் பரப்பளவு மட்டுமின்றி பயிர்களின் உற்பத்தித் திறனையும் சார்ந்து இருக்கிறது.

6) சிறு மற்றும் குறு விவசாயிகளை வேறுபடுத்துக்க.

பதில் :

| சிறு விவசாயிகள் | குறு விவசாயிகள் |
|---|---|
| ஒன்று முதல் இரண்டு ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்வோர் சிறு விவசாயிகளாவர். | ஒரு ஹெக்டேருக்கும் குறைவான பரப்பளவில் சாகுபடி செய்வோர் குறு விவசாயிகளாவர். |
| இவர்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு 26 விழுக்காடு ஆகும். | இவர்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு 36 விழுக்காடு ஆகும். |
| சிறு விவசாயிகளின் எண்ணிக்கை குறு விவசாயிகளின் எண்ணிக்கையை விட குறை வாகும். | தமிழகத்தின் பெரும்பாலான விவசாயிகள் குறு விவசாயிகளாவர். |

| | |
|---|---|
| தமிழகத்தில் சிறு விவசாயிகள் 14 விழுக்காடு உள்ளனர். | குறு விவசாயிகளின் எண்ணிக்கை 78 விழுக்காடு ஆகும். |

7) மழை நீர் என்றால் என்ன?

**பதில் :** மழை நீர் எனும் பதம் 1990ஆம் ஆண்டு டோனி ஆலன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. விவசாயம் அல்லது தொழிற்சாலை உற்பத்தியின் போது நுகரப்படும் நீர் மழை நீர் என அழைக்கப்படுகிறது.

8) நுண்ணீர் பாசன தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் என்ன?

**பதில் :** நுண்ணீர் பாசன தொழில்நுட்பம் பயிர்களில் அதிக மகசூல் கிடைக்கும். சீரான கால இடைவெளியில் அளவாக நீர் பாய்ச்சப்படுவதால் உற்பத்தி திறன் மற்றும் நீர் பயன்பாட்டுத்திறன் அதிகரிப்பதுடன் பணி ஆட்களின் செலவைக் கணிசமாக குறைத்து, களை வளர்ச்சியினைக் கட்டுபடுத்துகிறது.

9) தமிழகத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக வேளாண் தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றி எழுதுக.

**பதில் :** கடந்த 2014-15ஆம் ஆண்டில் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு தானியங்களின் அளவு ஒரு கோடியே 27 இலட்சத்து 35 ஆயிரம் டன்களாகும். மொத்த உற்பத்தியில் நெல் மட்டும் ஏறத்தாழ 80 இலட்சம் டன்கள் விளைந்தன. மொத்த உணவு தானிய உற்பத்தியில் மக்காச் சோளம் 20 விழுக்காடும், சோளம் 7 விழுக்காடும், கேழ்வரகு 3 விழுக்காடும் விளைந்தன. உளுந்து 3 விழுக்காடும் விளைந்தது.

10) பயிர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பதில் :** பயிர்கள் இரண்டு வகைப்படும். அவை உணவுப்பயிர்கள் மற்றும் உணவல்லாத பயிர்கள்.

## 3 மதிப்பெண் வினாக்கள்

4 x 3 = 12

11) 'தமிழகத்தில் பயிர் செய்யப்படும் பரப்பளவு ஆண்டுக்கு ஆண்டு மாறுபடுகிறது' - காரணம் கூறுக.

**பதில் :** 1. தமிழகத்தில் நிகரமாக பயிர் செய்யப்படும் பரப்பளவு 45,44,000 ஹெக்டேர் ஆகும்.
2. இப்பரப்பு ஆண்டுக்கு ஆண்டு மாறுபடுகிறது.
3. மழைப்பொழிவு காலத்தில் போதுமான அளவு மழை இருந்தால் இப்பரப்பு கூடும்.
4. மழை பொய்த்தாலோ, குறைந்தாலோ இப்பரப்பு குறையும்.
5. இப்பரப்பில் ஒரு சிறு பகுதி மட்டும் ஓர் ஆண்டில் ஒரு முறைக்கு மேல் பயிர் செய்யும் வாய்ப்பை வழங்கும்.
6. இப்பரப்பும் நீர் வசதிக்குத் தகுந்தவாறு ஆண்டுதோறும் மாறும்.
7. நிலையானதும் நம்பகமானதுமான நீராதாரம் இருந்தால் மட்டுமே இப்பரப்பு ஓரளவிற்கு நிலைத்திருக்கும்.

12) மொத்த பயிரிடப்பட்ட பரப்பு என்றால் என்ன?

**பதில் :** 1. ஓர் ஆண்டில் 1 ஹெக்டேர் நிலம் ஒரு முறை பயிரிடப்பட்டால் நிகர பரப்பு ஒரு ஹெக்டேர் ஆகும்.
2. பயிரிடப்பட்ட மொத்த பரப்பும் ஒரு ஹெக்டேர்தான் அதே நிலம் இருமுறை பயிரிடப்பட்டால் நிகர பரப்பு ஒரு ஹெக்டேர். ஆனால் பயிரிடப்பட்ட மொத்த பரப்பு 2 ஹெக்டேர் ஆகும்.
3. நிலையான நம்பகமான நீர் வசதிகள் பெருகும் போதும் மற்ற அனுசரணையான சூழல் நிலவும் போதும் நிலம் ஒரு முறைக்கு மேல் பயிரிடுவது கை கூடும். மொத்த பயிரிடப்பட்ட பரப்பும் கூடும்.

13) 'மறை நீர்' என்றால் என்ன?

**பதில் :** 1. மறைநீர் எனும் பதம் 1990 ஆம் ஆண்டு டோனி ஆலன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
2. விவசாயம் அல்லது தொழிற்சாலை உற்பத்தியின் போது நுகரப்படும் நீர் மறைநீர் என அழைக்கப்படுகிறது.
3. உணவு அல்லது மற்ற உற்பத்தி பொருட்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு வாணிகம் செய்யப்படும்போது அவற்றோடு மறைமுகமாக அவற்றிற்காக செலவிடப்படும் நீரும் செல்கிறது.
4. இதுவே மறைநீர் ஆகும்.

14) தமிழகத்தின் நெல் உற்பத்தித் திறன் பற்றிக் கூறுக.

**பதில் :** 1. நெல்லின் உற்பத்தித் திறன் 1965-66 ஆம் ஆண்டுகளில் 1409 கிலோவாக இருந்தது.
2. இது 1975-76ஆம் ஆண்டுகளில் 2029 கிலோ என மீண்டும் உயர்ந்தது.
3. 1985-86 ஆம் ஆண்டுகளில் 2372 கிலோ என மீண்டும் உயர்ந்தது.
4. இவ்வாறாக கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழகத்தின் நெல் உற்பத்தித் திறன் மூன்று மடங்கிற்கும் கூடுதலாக உயர்ந்துள்ளது.
5. தமிழகத்தின் உற்பத்தித் திறன் மற்றும் உணவு உற்பத்தி ஆகிய இரண்டுமே தொடர்ந்து அதிகரித்துள்ளது.

## 5 மதிப்பெண் வினாக்கள்

6 x 5 = 30

15) தமிழகத்தின் நீர் ஆதாரம் பற்றி சிறு குறிப்பு வரைக.

**பதில் :** 1. தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது வடகிழக்குப் பருவமழையாகும்.
2. வடகிழக்குப் பருவமழை நீரை நீர் தேக்கங்களிலும், கண்மாய்கள் மற்றும் ஏரிகளிலும் தேக்கி வேளாண்மையை மேற்கொள்கின்றனர்.
3. தமிழக வேளாண்மைக்கான நீரை வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள், கிணறுகள், மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் வழங்குகின்றன.
4. தமிழகத்தில் 2,239 கால்வாய்கள், 7,985 சிறு ஏரிகள். 33,142 பெரிய ஏரிகள், 15 இலட்சம் திறந்தவெளி கிணறுகள் மற்றும் 3,54,000 ஆழ்துளைக் கிணறுகள் பயன்படுத்தப்படுகின்றன.
5. தமிழக வேளாண்மை பெருமளவிற்கு நிலத்தடி நீரையே நம்பியிருக்கிறது.
6. இந்த நீர் ஆதாரங்களைக் கொண்டே தமிழகத்தில் வேளாண்மை மேற்கொள்ளப்படுகிறது.

16) வேளாண்மைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?

**பதில் :** 1. தமிழக வேளாண்மை பெரும் அளவிற்கு நிலத்தடி நீரையே நம்பி இருக்கிறது.
2. நிலத்தடி நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்துவது பல இன்னல்களையும் உருவாக்கவல்லது.
3. நிலத்தடியிலிருந்து நீரை எடுக்கும் அளவும் மழைப் பொழிவின் போது நிலத்தடிக்குச் செல்லும் நீரின் அளவும் சமமாக இருந்தால் துன்பமில்லை.
4. மாறாக நிலத்தடி நீரை எடுக்கும் அளவு கூடக்கூட நீர்மட்டம் கீழே செல்லும். ஒன்று நீர் முற்றிலும் வற்றிப் போகலாம் அல்லது பாசனத்திற்கு உதவாத நீராக மாறவும் வாய்ப்புண்டு.
5. நிலத்தடி நீரின் அளவையும் தன்மையையும் மத்திய நிலத்தடி நீர் வாரியம் தொடர்ந்து கண்காணிக்கிறது.
6. நீர் பயன்பாடு அளவைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்களை இவ்வாரியம் வகைப்படுத்தியுள்ளது.
7. தமிழகத்தில் 139 ஒன்றியங்கள் அளவுக்கு அதிகமாக நிலத்தடி நீரைப் பயன்படுத்துகின்றன.
8. 136 ஒன்றியங்களில் மட்டுமே நிலத்தடி நீரின் அளவு குன்றாமலும் தரம் குறையாமலும் உள்ளன.
9. தமிழக வேளாண்மை நிலத்தடி நீரை நம்பியுள்ளதால், அதன் பயன்பாட்டைச் சீர் செய்வது மிகவும் அவசரமும் அவசியமும் ஆகும்.

17) வேளாண் நீர் ஆதாரம் பற்றி ஆய்வு செய்க.

**பதில் :** 1. தமிழகத்தில் வற்றாத நதிகள் இல்லை.
2. தமிழகம் தனது தேவைக்கான நீரை வடகிழக்கு மற்றும் தேன்மேற்குப் பருவ மழைகளிலிருந்து பெறுகிறது.
3. தென்மேற்கு பருவமழைப் பொழிவு அபரிமிதமாக இருந்தால் காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதியிலுள்ள கர்நாடக அணைகள் நிரம்பி விட்டால் தமிழகத்தில் காவிரி ஆற்றில் நீர் பெருகும்.
4. தமிழகத்திற்கு பெரும் நீர் ஆதாரமாக இருப்பது வடகிழக்கு பருவ மழையாகும்.
5. வடகிழக்குப் பருவமழை நீரை நீர்த்தேக்கங்களிலும், கண்மாய்கள் மற்றும் ஏரிகளிலும் தேக்கி வேளாண்மையை மேற்கொள்கின்றனர்.
6. தமிழக வேளாண்மைக்கான நீரை கால்வாய்கள், ஏரிகள், குளங்கள். கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் ஆகியவை வழங்குகின்றன.
7. தமிழக வேளாண்மை பெருமளவிற்கு நிலத்தடி நீரையே நம்பி இருக்கிறது.
8. இந்த ஆதாரங்களைக் கொண்டே தமிழகத்தில் வேளாண்மை மேற்கொள்ளப்படுகிறது.

18) தமிழகத்தில் விளையும் பயிர்களைப் பட்டியலிடுக.

**பதில் :** 1. நெல்
2. மக்காச் சோளம்
3. சோளம்
4. கம்பு
5. கேழ்வரகு
6. வரகு
7. தென்னை
8. சாமை
9. கரும்பு
10. வாழை
11. பருத்தி
12. வேர்க்கடலை
13. உளுந்து
14. துவரை
15. பாசிப்பயிறு
16. காப்பி
17. தேயிலை

19) நுண்ணீர் பாசனத் தொழில் நுட்பத்தினை விவரி.

**பதில் :** 1. நுண்ணீர் பாசனத் தொழில்நுட்பம் பாசன நீர் பற்றாக்குறைக்கு நல்ல தீர்வாக விளங்குகிறது.
2. இத்தொழில் நுட்பம் பாரம்பரிய நீர்ப்பாசன முறைகளைவிட பயிர்களில் அதிக மகசூல் கிடைக்க வழி செய்கிறது.
3. சீரான கால இடைவெளியில் அளவான நீர் பாய்ச்சப்படுவதால் உற்பத்தித் திறன் மற்றும் நீர் பயன்பாட்டுத் திறன் அதிகரிக்கின்றன.
4. பணியாட்களின் செலவு கணிசமாகக் குறைகிறது.
5. களை வளர்ச்சியினைக் கட்டுப்படுத்துகிறது.
6. நுண்ணீர் பாசனத்தின் மூலம் நீர் வழி உரமிடுவதால் உரப் பயன்பாட்டுத் திறன் அதிகரிப்பதோடு தரமான விளைபொருளும் கிடைக்கிறது.
7. தமிழகம் ஒரு தண்ணீர் பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால் நுண்ணீர் பாசனத் திட்டத்தினை அதிக தண்ணீர் தேவைப்படும் விவசாய பயிர்களில் தீவிரமாக செயல்படுத்துவதில் அரசு கவனம் செலுத்துகிறது.

20) தமிழகத்தில் நிலப்பயன்பாட்டு வகைகள் பற்றி விளக்கவும்.

**பதில் :** (i) தமிழகத்தின் மொத்தம் புவியியல் பரப்பு ஒரு கோடியே முப்பது இலட்சத்து முப்பத்து மூன்றாயிரம் ஹெக்டேர்கள் ஆகும்.
(ii) இப்பரப்பில் ஏறத்தாழ ஒரு விழுக்காடு மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பு மட்டுமே பயிர் செய்யப் பயன்படுத்தப்படுகிறது.
(iii) வேளாண் அல்லாத பயன்பாட்டுக்கு 17 விழுக்காடு நிலம் பயன்படுத்தப்படுகிறது.
(iv) ஏறத்தாழ இதே அளவு நிலம் காடுகளாக உள்ளன.
(v) மொத்த நிலப்பரப்பில் 4 விழுக்காடு நிலங்கள் பயன்படுத்த முடியாதவை.
(vi) தரிசாக கிடைக்கும் நிலங்களின் அளவு பத்தில் ஒரு பகுதியாகும். மற்ற தரிசு நிலங்கள் 13 விழுக்காடு ஆகும்.
(vii) இவையன்றி மேய்ச்சல் நிலங்கள். மரங்கள் வளர்க்கப்படும் நிலங்கள் ஆகியவை மொத்த நிலப்பரப்பில் 5 விழுக்காட்டுக்கும் சற்றே கூடுதலாக உள்ளன.